திருகோணமலை நலன்புரிச் சங்கம்

வழங்கும்

# திருமலை இரவு

2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை நலன்புரிச் சங்கம்

வழங்கும்

# திருமலை இரவு

றொரன்ரோ – கனடா ஐப்பசி 24, 2010

Toronto - Canada October 24, 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பொருள் பக்கம்

1. தலைவர் செய்தி ..........03
2. காப்பாளர் செய்தி ..........04
3. வாழ்த்துரை - திரு. இரா. சம்பந்தன் நா.உ. ..........05
4. வாழ்த்துரை - திரு. யோன் கனிசு நா.உ. ..........06
5. ஆதரவற்ற சிறார் இல்லங்கள் ..........07
6. திருகோணமலை மாவட்டக் கல்விநிலை ..........10
7. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் இருப்பு ..........11
8. திருகோணமலை மாவட்டத்தின் முதன்மை ..........13
9. கிணற்றுக்குள் விழுந்துகிடக்கின்றோம் ..........15
10. விளம்பரங்கள் ..........18
11. கோடை கால நிகழ்வுகள் ..........78
12. நன்றிகள் ..........80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை நலன்புரிச்சங்கம்**
**ரொரன்ரோ - கனடா**

# தலைவர் செய்தி



திருகோணமலை இரவு 2010 நிகழ்ச்சிக்காகத் தொரன்ரோ மாநகரில் வாழும் திருகோணமலை மாவட்ட மக்கள் ஒன்று கூடும் இந்த நன்னாளில் திருகோணமலை மாவட்ட மக்கள், திருகோணமலை மாவட்ட நலன்விரும்பிகள், கொடையாளர்கள், சங்க உறுப்பினர்கள், சங்கச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சங்கச் செயற்பாடுகளில் தலையானது ஆதரவற்ற சிறார் இல்லங்களை அமைத்து அவற்றை வெற்றியாக நடத்தி வருவதாகும். இந்த ஆதரவற்ற சிறார் இல்லங்களை நடத்தப் புரவலர்களாக இருந்து திங்கள் தோறும் பணம் வழங்கி வருவோரை நன்றியோடு நினைவு கொள்வதோடு, அவர்கள் மீதான நமது மாறாத பற்றுறுதியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் பொருளாதார வசதியற்ற பல்கலைக்கழக மாணவரது கல்வியைத் தொடரவும் திருகோணமலை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் வதியும் மாணவரது கல்வி மேம்பாட்டுக்காகவும் நன்கொடை அளித்துவரும் நலன்விரும்பிகள் அனைவரையும் நன்றியுணர்வோடு நினைவு கொள்கின்றோம்.

கடந்த கால் நூற்றாண்டாக எமது தாயகத்திலே இடம்பெற்ற போராலும், ஐந்து ஆண்டுக்கு முன்னேற்பட்ட கடல் கோளாலும் பாதிக்கப்பட்ட மக்கள் நலன்கருதித் திருகோணமலை நலன்புரிச்சங்கம் ஆற்றிவரும் பணிகளுக்கு பொருளுதவி, செயலுதவி, ஆக்கம், ஊக்கம், ஆற்றுப்படுத்தல் ஆகியவற்றை அளித்துவரும் அனைவருக்கும் நுழைவுச்சீட்டு வாங்கிக் கொண்டு இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ந. நிரஞ்சன்
தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை நலன்புரிச்சங்கம்
## திருகோணமலை

# காப்பாளர் செய்தி



புதியதோர் சமூதாயம் உருவாக்குவோம் என்ற பாரிய முனைவுடன் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது 2005ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இன்று வரை மாபெரும் சேவையினைச் செய்து வருகின்றது.

வசதி வாய்ப்பின்றியும் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் காரணமாகவும் தாய் தந்தையர்களை இழந்து பாடசாலையை விட்டு இடை விலகிய மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளி கொடுக்க ஓர் வரப்பிரசாதமே இந்த திருகோணமலை மாவட்ட நலன் புரிச்சங்கம் என்றால் அதன் பெருமை சொல்ல வார்த்தையில்லை. இச்சங்கமானது திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்லாது வட கிழக்கு மாகாணத்திலும் தனது பணியிணை ஆற்றிவருவது பெருமைக்குரியதே.

அதுமட்டுமன்றி நூற்றுக்கணக்கான தாய் தந்தையர்களை இழந்த மாணவர்களுக்காக சிறுவர் இல்லம் ஒன்றை நடத்துவதற்கு மிகப்பெரிய கட்டட வசதியினை திருகோணமலையில் சாம்பல்தீவிலும் மூதூர் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவிலும் அமைத்து அதன் சிறப்பு விழாவினையும் கண்டு தற்போது இயங்கி வருகின்றன.

இத்தனை மகத்துவமான சேவைக்காக இந்நிறுவனத்தின் ஆரம்பகாலப் பணியாளர்களையும் நினைவு கூரும் இவ்வேளையில் இச்சங்கத்தின் வளர்ச்சியில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்திய இலங்கையின் புலம் பெயர் கனடா வாழ் மக்களையும் அவர்களின் செயல் திறன் மிக்க சேவையையும் மனமாரப் பாராட்டுகின்றோம். இந்நிறுவனம் மேலும் வளங்கள் பல பெற்று எதிர்காலத்தில் கல்வி உலகிற்கு எம் பிள்ளைகள் முகம் கொடுக்கக் கூடிய வகையில் பயன்மிக்க சேவையாற்ற வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

கோ. சண்முகநாதன்
காப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

**PARLIAMENT**



The Trincomalee Welfare Association – Toronto, Canada, has continued to render valuable service to deserving segments of society in Trincomalee District. I am extremely pleased to be able to send them this message of felicitations on the occasion of their annual get together.

Around seventy five orphans are looked after and provided with their needs at Sambaltheevu and Mallikaitheevu – two villages on the North and the South of Trincomalee Town. This enables these children to live without deprivation. Several deserving students receiving University education, lacking adequate financial help, and hailing from Trincomalee District, particularly from rural areas, are supported financially to continue with their education at University.Several children from the Trincomalee District, following the General Certificate of Education courses, both at the Ordinary and Advanced Levels, needing assistance in different subjects are provided with financial help to receive such assistance.

By these activities, the Trincomalee Welfare Association helps very needy and deserving segments of society in Trincomalee, and thereby contributes towards uplifting these young persons, to become useful citizens, who can eventually be of service t o Trincomalee and its people.

I commend the Trincomalee Welfare Association for their valuable service and wish them very many more years of such service.

R. Sampanthan

(R.SAMPANTHAN)

Member of Parliament

Trincomalee District

19 - 10 - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA

# *TORONTO 2010*

*As the Member of Parliament for Scarborough Centre,*
*I wish to congratulate the*
***"Trincomalee Welfare Association of Canada"***
*on the celebration of your Association's 19th Anniversary.*

*Your Association is a valuable organization*
*in Scarborough serving the Tamil Canadians*
*who have migrated from the*
*District of Trincomalee in Sri Lanka.*

*I commend you on your hard work and dedication.*

*By working together in our communities, we create*
*a spirit of strength and progress that enrich all of us.*

*Please accept my sincere congratulations on this occasion*
*and best wishes for continued success in the future.*

*Sincerely Yours,*

*John Cannis, M.P.*
*Member of Parliament*
*Scarborough Centre*

JOHN CANNIS, M.P.
SCARBOROUGH CENTRE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவரற்ற சிறார் இல்லங்கள்

திருகோணமலை நலன்புரிச் சங்கமானது, எமது தாயகத்தில் நிலவிய போராலும், 2004 இறுதியில் ஏற்பட்ட ஆழிப் பேரலையாலும் பெற்றார், உற்றார், மற்றும் உறவினரை இழந்து ஆதரவற்றோர் ஆகிவிட்ட 75 சிறாரைச் சாம்பல்தீவு, மற்றும் மல்லிகைத்தீவு ஆகிய இடங்களில் சங்கத்தால் நிறுவப்பெற்ற இரண்டு இல்லங்களில் வைத்து உணவு, உடை, உறைவிடம், மருத்துவம், கல்வி, பொழுதுபோக்கு ஆகியன வழங்கி, வளர்த்து வருவதைத் தாங்கள் அறிவீர்களென நம்புகின்றோம்.

ஆண்பிள்ளைகளைச் சாம்பல்தீவில் 2005ஆம் ஆண்டில் நாற்பதாயிரம் டொலர் செலவில் கட்டப்பெற்ற கட்டடத்தில் வைத்து வளர்த்து வருகின்றோம்.











இந்த இல்லத்தில் நிலவும் இடநெருக்கடியை நீக்கும் பொருட்டாக இவ்வில்லத்துக்கு அயலில் இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பல்தீவு இல்லத்தில் வதியும் பிள்ளைகள் மேற்படி இல்லத்துக்கு அயலில் உள்ள சாம்பல்தீவு மகாவித்தியாலத்தில் கல்வி பயின்று வருகின்றனர். க.பொ.த. உயர்தர வகுப்பில் அறிவியல் பயிலும் சில மாணவர் திருகோணமலை நகருக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர்.

மாணவரது கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு தனிப்பட்ட ஆசிரியர்கள் இல்லத்துக்கு வந்து கற்பிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இல்லச் சிறாரது கணினி அறிவை வளர்க்கும் நோக்கோடு கணினிக் கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இல்லத்தில் வதியும் சிறார் மட்டுமன்றி அயலில் வாழும் சாம்பல் தீவுப் பிள்ளைகளும் இதைச் செம்மையாகப் பயன்படுத்தி பயனடைந்து வருகின்றனர்.

பெண்பிள்ளைகளை மல்லிகைத்தீவில் 2005ஆம் ஆண்டில் நாற்பத்தேழாயிரம் டொலர் செலவில் கட்டப்பெற்ற இல்லத்தில் வைத்து வளர்த்து வருகின்றோம்.










இவ்வில்லத்தில் நிலவும் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டாக ஒரு சமயற்கூடத்தை 2010 யூலைத் திங்களில் அமைத்துள்ளோம். மல்லிகைத்தீவு இல்லத்தல் வதியும் பிள்ளைகள் மேற்படி இல்லத்துக்கு அயலில் உள்ள மல்லிகைத்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். மாணவரது கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு தனிப்பட்ட ஆசிரியர்கள் இல்லத்துக்கு வந்து கல்வி கற்பிக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


கணினி அறிவை மேம்படுத்தும் நோக்கோடு இவ்வில்லத்திலும் ஒரு கணினிக் கூடத்தை நிறுவ வேண்டிய தேவை உள்ளது.திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் திருகோணமலைக் கிளை இவ்வில்லங்களை நடத்தி வருகின்றது. இவற்றின் அன்றாடப் பணிகளைக் கவனிக்க இரண்டு மேற்பார்வையாளர், இரண்டு சமயலாளர், இரண்டு காவலர் ஆகியோர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வில்லங்களை நடத்த மாதம் ஒன்றுக்கு 3000 டொலர் செலவு ஏற்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிதி:

இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி கிடைத்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 21 மாணவர் பொருளாதார வசதியின்மையால் படிப்பைத் தொடர முடியாத நிலையில் இருந்தனர். இவர்களது கல்வி தடைபடாதிருக்கும் பொருட்டாக இவர்களுக்கு நிதி உதவி அளித்து வருகின்றோம்.










மேலும், திருகோணமலை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த பிள்ளைகளையும் பல்கலைக்கழகம் செல்ல ஊக்குவிக்கும் நோக்கோடு 12ஆம் வகுப்புப் படிக்கும் மாணவருக்குச் சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றோம். இத்தகைய பயிற்சிகளை ஈச்சிலம்பற்றுக் கல்வி வலயம், மூதூர்க்கல்வி வலயம் மற்றும் நிலாவெளிக் கல்வி வலயத்தில் நடத்தி வருகின்றோம்.

மேலும் கந்தளாய், தம்பலகாமம் ஆகிய வலையங்களுக்கும் இத் திட்டத்தை விரிவாக்க எண்ணியுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்டத்தின் கல்வி நிலை

*சி. சிவதாசன்*

இணைந்த மாகாண சபையிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்ட பின்னர் கிழக்குமாகாணத்தின் கல்வி நிர்வாகம் பெரும்பான்மையினத்தவரிடம் சிக்கிக் கொண்டது. மாகாண ஆளுநர் சிங்களவர், மாகாண கல்வி அமைச்சர் சிங்களவர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிங்களவர், மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சிங்களவர்.

தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டத்தில் மூன்று இன மக்களும் சமமாக வாழ்கின்றனர்.

திருகோணமலை மாவட்டம் தற்போது நான்கு கல்வி வலயங்களைக் கொண்டுள்ளது. திருகோணமலை, மூதூர், கிண்ணியா, கந்தளாய் ஆகியவையே அவையாகும். கந்தளாய் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கிண்ணியா முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.மூதூர் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சமமாக வாழ்கின்றனர்.திருகோணமலை வலயத்தில் தமிழ் மக்களே பெரும்பான்மையாக உள்ளனர்.

ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி வேலைகள் எல்லாம் சிங்கள அதிகாரிகள் எடுக்கும் முடிவின்படி தான் மேற்கொள்ளப் படுக்கின்றன. அபிவிருத்தி பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் பெரும்பான்மையின அதிகாரிகளின் கைகளில்தான் விடப்படுள்ளது.

தமிழ்மொழி மூலபாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் நியமனம் திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து தேசியப்பாடசாலைகள் உள்ளன. அவற்றில் ஒன்று சிங்கள மொழிமூலப்பாடசாலையாகும், ஏனையவை தமிழ்மொழி மூலப்பாடசாலைகளாகும். தமிழ்மொழி மூல தேசியப்பாடசாலைகளில் ஆங்கில மொழிமூல வகுப்புக்களும் தற்போது நடத்தப்படுகின்றன. அவ்வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் ஆங்கில மொழியிலேயே கற்பித்தலை மேற்கொள்வார்கள். அத்தகைமை கொண்ட ஆசிரியர்கள் தேவை என்று பாடசாலை அதிபர்கள் மேலதிகாரிகளுக்கு அறிவித்தவுடன் அத்தகைமையுடைய ஆசிரியர்கள் அப்பாடசாலைக்கு நியமிக்கப் படுகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு தமிழ் மொழி தெரியாது. சிங்கள மொழியும் ஆங்கில மொழியும் மாத்திரம் தெரிந்தவர்கள் அவர்கள். அவர்கள் ஆங்கில மொழி மூல போதனைக்காக அனுப்பப்படுவதால் பாடசாலை அதிபர்களால் அந்நியமனங்களை எதிர்க்க முடியவில்லை.

இந்த நிலையை தொடரவிட்டால் அடுத்தது எவ்வாறானதாக அமையும் என்று தமிழ் மொழி மூல ஆசிரிய சமூகத்தின் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

அடுத்ததுப் பாடசாலைகளின் அதிபர்களாக சிங்களவர்கள் நியமிக்கப்படலாம் என்ற நிலை ஏற்படலாம். ஏன் தமிழ்மொழி மூல பாடசாலைக்கு சிங்கள அதிபர் என்று கேட்டால், எந்த மொழி அதிபர் என்றாலும் அவர் பாடசாலையை நிர்வாகம் செய்வதற்குத் தானே, கற்பிப்பதற்கு அல்லவே என்று ஆளும் வர்க்கம் கூறலாம்.

இவ்வாறெல்லாம் திருகோணமலை மாவட்ட தமிழ்க்கல்விச் சமூகம் சிந்திக்க ஆரம்பித்துள்ளது. இவ்வாறான நியமனங்கள் எல்லாம் ஒரு வழிப்பாதையாக அமையப்போகின்றது என்று அமைந்தால் தமிழ் மொழி கல்விச் சமூகம் வேலைவாய்ப்பில் பாதிக்கப்படும். இரு வழிப்பாதையாக அமையின் சிங்கள பாடாசாலைக ளுக்கு தமிழர்கள் அதிபர்களாகவும் சிங்கள மொழிமூல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கற்பித்தலுக்கு ஆங்கிலத்தில் போதிக்கும் தகைமை பெற்ற தமிழர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கும் நிலை உருவானால் அது ஆரோக்கியமானதாக இருக்கலாம் என்ற அபிப்பிராயமும் காணப்படுகின்றது.

ஏவ்வாறாயினும் திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்மொழி மூலக்கல்வி பலத்த சோதனைளை எதிர் நோக்கியிருக்கின்றது என்பதை ஏற்றுக்ககொள்ளத்தான் வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் அமைச்சு ஆதிகாரிகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய இடமாற்றச்சபை ஊடாக இடமாற்றங்களை மேற்கொண்ளும் நடைமுறை தற்போது இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்று ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். 2011 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பாடசாலையில் எட்டு வருடங்கள் பணிபுரிந்த ஆசிரியர்கள் அனைவரும் இடமாற்றஞ் செய்யப்பட வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. மாகாண சபைகளும் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்குப் பின்னரான புதிய சூழ்நிலையில் ஆசிரிய தொழிற்சங்கங்கள் என்ன செய்கின்றன என்ற வினா எழுப்பப்படுகின்றது. பலம் பொருந்திய தொழிற்சங்கமான இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மௌனித்துப் போயுள்ளது. தனிமனித ஆதிக்கத்திற்குள் சிக்கியிருக்கும் இச்சங்கம் வருடாந்தக் கூட்டத்தை நடத்தாது செயலிழந்துள்ளது. கடந்த காலத்தில் இச்சங்கம் தமிழ் கல்வி வளர்ச்சி, தமிழ் மாணவர் மற்றும் தமிழ் ஆசிரியர் நலன்களுக்காக உரத்துக் குரல் கொடுத்து களத்தில் நின்று போராட்டங்களை நடத்தி சாதனை புரிந்தது. திருகோணமலை மாவட்டக் கல்வித்துறை எதிர்நோக்கும் பேரினவாத அத்துமீறல்களுக்கு தலைவணங்கிப் போகும் நிலைதான் ஆசிரிய தொழிற்சங்கங்கள் மத்தியிலும் காணப்படுகின்றது

போருக்குப் பின்னரான சூழலில் மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடற்ற தன்மை அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஒழுக்கக் குறைவு மற்றும் ஆசிரியர்களை மதிக்காத தன்மையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. பெற்றோராலும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

# திருகோணமலை மாவட்டத்தில் தமிழினத்தின் இருப்பு பறிபோகும் நிலை

***சி. சின்னையா***

திருகோணமலையின் வடக்கே தென்னமரவடி தொடக்கம் தெற்கே வெருகல் வரை தமிழ் இனத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் வரலாற்றுப் பதிவுகளாக சைவ ஆலயங்கள் அமைந்துள்ளன.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கும் மாவட்டமாக திருகோணமலை பல நூற்றாண்டுகளாக விளங்கி வந்துள்ளது. இனியும் இவ்வாறு விளங்குமா என்ற ஐயம் முப்பது வருட யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் விசேடமாக தமிழ்ச் சைவ மக்கள் மத்தியில் இன்று எழுந்துள்ளது. பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் நாளாந்தம் சமய ரீதியான அத்துமீறல்கள் பேரினவாத அரச அதிகாரவர்க்கத்தினரால் படையினரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதே இதற்குக் காரணமாகும்.

திருகோணமலை மாவட்டம் போருக்குப் பின்னர் அரச படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது என்பது அனைவரும் அறிந்ததே.

.இந்த நிலையில் தற்போது இடம்பெற்று வருகின்ற சில நிகழ்வுகளைப் பார்ப்போம்.

கல்லடி என்ற தமிழ்க்கிராமம். அங்கு ஒரு மலைக் குன்று உள்ளது. அதன் மீது நீலியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னர் ஒரு நாள் சைவ மக்களால் வழிபட்டு வந்த நீலியம்மன் விக்கிரகம் மலை மீது உள்ள கோயிலில் இருந்து காணாமற்போனது. திடீரென்று ஒரு நாள் காணாமற்போன நீலியம்மனின் விக்கிரகம் மலையின் அடிவாரத்தில் வைக்கப்பட்டிருந்தது. மக்கள் அதிசயப்பட்டனர். மலை அடிவாரத்தில் வைக்கப்பட்டிருந்த இடத்தில் வைத்தே மக்கள் நீலியம்மனை மீண்டும் வழிபடத் தொடங்கினர். காரணம், நீலியம்மன் சிலை வைக்கப்பட்டிருந்த மலையின் உச்சியில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்ததேயாகும். கல்லடி கிராமத் தமிழ் மக்கள் வாய் திறந்து பேச முடியாத நிலை. யார் நீலியம்மன் சிலையை மலை உச்சியிலிருந்து கீழே கொண்டு வந்தார்கள்? எவ்வாறு புத்தர் சிலை மலை உச்சிக் கோயிலுக்கு போனது?

இலங்கைத்துறைமுகத்துவாரம் என்ற இன்னொரு தமிழ்க்கிராமம் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கின்றது. நூற்றுக்கு நூறு தமிழ் மக்கள் தான் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னர் படையினரின் காவல் நிலையம் ஒன்று அங்கு நிறுவப்பட்டுள்ளது. கிராமத்திற்கு செல்லும் மக்களை காவல் நிலையத்தில் உள்ள படையினர் எங்கே போகிறீர்கள் என்று கேட்பர். அப்பாவி மக்கள் இலங்கைத்துறைமுகத்துவாரம் கிராமத்திற்கு செல்கின்றோம் என்று கூறுவர். அப்படியா? லங்கா பட்டுன என்று இனி கூற வேண்டும் ஏன்று படையினர் கூறிவிட்டு அவர்கள் எடுத்துச் செல்கின்ற பொதிகளை துருவி துருவி சோதனையிட்ட பின்னரே செல்ல அனுமதிக் கின்றனர்.

சிங்களவர்கள் இலங்கைத் துறைமுகத்துவாரம் கிராமத்தை லங்காபட்டுன என்றே அழைத்து வருகின்றனர். படையினரின் அச்சுறுத்தல் காரணமாக இக்கிராமத்தவர்கள் இப்போது படையினரின் காவல் நிலையங்கள் ஊடாகச் செல்லும்போது எங்கே என்று கேட்டால் லங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுன என்று செல்கின்றார்கள். படையினர் புன்னகையுடன் சோதனை என்று தடுத்து வைத்து அவர்களின் பொதிகளைச் சோதனை செய்வதில்லை.

இலங்கைத்துறைமுகத்துவாரம் இப்போது லங்காபட்டுனவாக தமிழர் வாய்களிலும் ஒலிக்க ஆரம்பித்துள்ளது. எல்லாமே போய்விட்டது இனி பெயரில் என்ன உள்ளது என்ற மனோபாவம் இடம்பெயர்ந்து எங்கோவெல்லாம் சென்று தஞ்சமடைந்து மீண்டு வந்திருக்கும் இலங்கைத்துறைமுகத்துவாரம் மக்களிடையே பரவி வருகின்றது.

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 34 கிலோ மீற்றர் தொலைவில் குச்சவெளி கிராமம் உள்ளது. மன்னன் குளக்கோட்டன் கோணேஸ்வராலயத்தை கட்டிய பின்னர் கோவில் தொண்டுகளைச் செய்ய குச்சவெளியில் மக்களைக் குடியமர்த்தினான்.

அம்மக்கள் அக்கிராமத்திலிருந்து கோயிலுக்கு தர்ப்பைப் புல்லில் கூர்ச்சம் செய்து அனுப்பி வந்தார்கள். குளக்கோட்டன் அவர்களுக்கு இட்ட பணியாகும் அது. அதனால் கூர்ச்சவெளி என்று அக்கிராமத்திற்கு பெயர் வந்தது என்றும் அப்பெயர் பின்னர் காலக்கிரமத்தில் குச்சவெளி என்று அழைக்கப்படலாயிற்று என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குச்சவெளியில் உள்ள பல சைவ ஆலயங்களில் ஒன்று சித்திவிநாயகர் கோவில். இவ்வாலயம் அமைந்துள்ள காணயில் அரச மரம் ஒன்று உள்ளது. தற்போது இவ்வாலயம் அமைந்துள்ள காணியில் இருந்து புத்தர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டதாக திருகோணமலை அரசாங்க அதிபருக்கு தகவல் போனது. ஆலயக்காணியில் புத்தர் சிலை புதைந்திருந்து மீட்கப்பட்டதாக திருகோணமலை அரசாங்க அதிபர் தொல்லியல் ஆய்வுத்திணைக்களத்திற்கு அறிக்கை கொடுத்திருக்கின்றார்

பண்டைக்கால குறுநில தமிழ் மன்னர்களின் ஆட்சிக்கு கொட்டியாரப்பற்று உட்பட்டிருந்தது திருக்கரசையம்பதி என்ற பெயர் அமைந்த கிராமம் அங்கு உள்ளது என்று திருக்கரசையம்பதி புராணம் கூறுகின்றது. அங்கு திருமங்கலாய் சிவன்கோவில் அமைந்துள்ளது. அகத்திய முனிவரால் தாபிக்கப்பட்டது அகத்தியர் தாபனம். ஆங்கு வரலாற்றுப் புகழ் மிக்க சிவாலயம் இருந்ததற்கான ஆதாரங்களாக லிங்கம், நந்தி, பலிபீடம் கோயில் வாயிற்கற்கள் இன்றும் இருக்கின்றன. ஆகத்தியர் தாபனத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் மகாவலி கங்கை ஓடிக்கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிவுற்கு வந்த சில தினங்களில் ஒரு நாள் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் ஒரு கூட்டம் புகுந்து புனரமைப்புச் செய்யப்பட்டிருந்த சிறிய கோயிலில் வைக்கப்பட்டிருந்த வரலாற்றுச் சின்னங்கள் சிலவற்றை களவாடிச் சென்றது. அப்பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் விவசாயம் செய்து வந்த காணிகளை பலவந்தமாகப் பிடித்து பெரும்பான்மையினத்தவர்கள் சிலர் நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்

திருகோணமலை மடத்தடி மாரியம்மன் கோயில் மணியகாரனே கன்னியா வெந்நீரூற்றுக்களையும் அங்குள்ள பிள்ளையார் கோயிலையும் பல்லாண்டுகளாக பரிபாலனம் செய்து வந்தார். அதன் பின்னர் அவற்றைப் பரிபாலிக்கும் பொறுப்பு அப்போது இருந்த உப்புவெளி கிராம சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. உப்புவெளி பிரதேச சபையை உள்ளடக்கியதாக திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபை வந்தவுடன் அதனிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் அலுவலர்கள் கன்னியா வெந்நீருற்றுகளில் குளிக்க வருபவர்களிடமிருந்து டிக்கட் கொடுத்து பணம் வசூலித்து வந்தனர் வெந்நீருற்றுப் பிரதேசத்தை சுத்தமாக வைத்திருக்கவும் வருபவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமே வசூலிக்கப்படும் பணத்தை பிரதேச சபை செலவழித்து வந்தது.

சிதைந்திருந்த பிள்ளையார் கோயிலை திருத்தும் பணியை பௌத்த பிக்குகளின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டது. இடிந்த கோயிலின் கற்கள் அனுராதபுரத்து காலத்தவை என்று பௌத்த பிக்குகள் கூறியதை ஏற்று கோயிலின் புனருத்தாரண வேலைகளை தொல்லியல் ஆய்வுத் திணைக்களம் நிறுத்தியது.

இந்த நிலையில்- கடந்த மாதம் நடந்த நிகழ்வு இது சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலை அரசாங்க அதிபர் கன்னியாவிற்கு சென்றார். கன்னியா வெந்நீருற்றுக்கள் இருக்கும் பகுதிக்குச் சென்று இறங்கினார். வெந்நீரூற்றுக்களில் குளிக்க வருபவர்களிடமிருந்து பிரதேச சபை அலுவலர்கள் பணம் வசூலித்துக் கொண்டிருந்தனர். அரச அதிபர் அவர்களை அழைத்தார் கன்னியாவின் வரலாற்றைத் தெரிவிக்கும் விளம்பரப் பலகையைக் கழற்றும் படி தன்னுடன் வந்திருந்த பணியாளருக்கு அரச அதிபர் பணித்தார். விளம்பரப் பலகை கழற்றப்பட்டது.

கன்னியா வெந்நீரூற்றுக்கள் பிரதேசத்தில் வெந்நீரூற்றுகள் இராவணேஸ்வரனால் தனது தாயாரின் அந்தியட்டிக்கிரியைகளை நடத்துவதற் காகத் தோண்டப்பட்டன. அதற்காக அருகில் பிள்ளையார் ஆலயமும் கட்டப்பட்டது இவ்விவரங்களை கொண்ட விளம்பரப்பலகை ஒன்றையும் பிரதேசத்தில் பிரதேச சபை தொங்கவிட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் விளம்பரப்பலகையில் பிழையான வரலாற்றுத் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கன்னியா பிரதேசம் தொல்லியல் திணைக்களத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது சபையின் பணியாளர்களிடம் உரத்துக் கூறியதுடன் இனி வருபவர்களிடம் பணம் வசூலிக்கக்கூடாது என்றும் அரச அதிபர் உத்தரவிட்டார்.

பிரதேச சபை அன்றிலிருந்து பணம் வசூலிப்பதை நிறுத்தி விட்டது. அப்பிரதேசத்தில் பராமரிப்புப் பணியையும் நிறுத்திவிட்டது.

அடுத்தது எந்த சைவ கோவில் பௌத்த பேரினவாதத்தினால் குறி வைக்கப்பட்டுள்ளது என்பது தெரியாத நிலையில் தமிழ் மக்கள் விசேடமாக சைவத்தமிழ் மக்கள் ஏக்கத்துடன் காணப்படுகின்றனர்

# திருகோணமலை மாவட்டத்தின் முதன்மை

**இரா. துரைரத்தினம்.**

தமிழ்மக்களின் தாயகபூமியான வடக்கு கிழக்கு மாகாணத்தில் புவியியல் பொருளியியல் அரசியல் ரீதியாக திருகோணமலை மாவட்டம் அதிமுக்கியத்துவம் பெறும் காரணத்தினாலேயே இம்மாவட்டத்தை தமிழர்களிடமிருந்து பறிப்பதற்காக சிங்கள தேசம் எடுத்து வரும் கடுமையான முயற்சிகளில் அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஆங்கிலேயர்களிடமிருந்து சிங்களவர்களின் கைகளில் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட பின் பாரிய நீர்பாசனத்திட்டங்கள் திருகோணமலையை இலக்கு வைத்தே நடத்தப்பட்டிருக்கிறது.

1926 ஆம் காலப்பகுதியில் பிரித்தானியர்களின் கடற்படை தளத்தில் பணியாற்றுவதற்காக தென்பகுதியிலிருந்து தொழிலாளர்களாகவும் வாகன திருத்துனர்களாகவும் 1501பேர் குடியேறியிருந்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன் பின்னர் 1948ம் ஆண்டின் பின்னர் டி.எஸ்.சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட அல்லை – கந்தளாய் நீர்பாசனத் திட்டங்களின் மூலம் அனுராதபுர மாவட்டம் பொலனறுவை மாவட்டம் ஆகியவற்றின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தை ஆக்கிரமித்த சிங்கள ஆட்சியாளர்கள் நிலப்பிரதேசத்தால் இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணத்தை முற்றாக பிரிப்பதற்கு எவ்வாறான திட்டங்களை செயற்படுத்தி வருகிறார்கள் என்பதையே இப்பகுதியில் பார்ப்போம்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து மட்டுமல்ல வடகிழக்கு மாகாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை மாவட்டத்தை பிரித்தெடுத்து வடமேல் மாகாணத்துடன் இணைப் பதற்கான செயற்திட்டத்தையே அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இதற்காக அனுராதபுர மாவட்டத்தின் எல்லைப் பகுதியாக இருந்த பதவியா, (பதவிசிறிபுர) குமரேசன்கடவை (கோமரன்கடவல) முதலிக்குளம் (மொறவேவ) தம்பலகாமம் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளை முழுமையாக சிங்கள பிரதேசமாக மாற்றியிருக்கும் சிறிலங்கா அரசு தற்போது திருகோணமலையின் வடக்கு எல்லையான தென்னமரவாடி புல்மோட்டை பகுதிகளிலிருந்து குச்சவெளி வரையான தமிழ் கிராமங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை அதிகரித்து வருகிறது.

அது போல திருகோணமலை மாவட்டத்தின் கிழக்கு எல்லையான ஈச்சலம்பத்தை பிரதேச செயலகப்பிரிவில் உள்ள பூமரத்தடிச்சேனை இலங்கைத்துறை வெருகல் ஆகிய கிராமங்களில் சிங்கள முஸ்லீம் குடியேற்றங்கள் அதிகரித்து வருகிறது.

இதற்கு ஒருவகையில் தமிழர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதுதான் மிகப்பெரிய வேதனை உதாரணமாக மூதூர் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கிளிவெட்டி இருதயபுரம், பருத்தித்திடல் பலத்தடிச்சேனை பாரதிபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் 2007ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்து மட்டக்களப்பு உட்பட வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். 1990களின் பின்னர் பலர் வெளிநாடுகளு க்கும் சென்றனர். தற்போது இக் கிராமங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் இடம்பெயர்ந்த மக்களில் 90 வீதமானவர்கள் தமது சொந்த கிராமத்திற்கு திரும்பவில்லை.

கிளிவெட்டியில் 2007ஆம் ஆண்டுக்கு முன் 3219 தமிழர்கள் இருந்ததாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போது 15குடும்பங்கள் மட்டுமே அங்கு மீளக்குடியேறியிருக்கின்றனர். வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் தமது காணிகளை அங்கு இருந்தவர்களிடமே பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்தனர். காணிகளை பராமரித்த வர்களும் இடம்பெயர்ந்திருப்பதால் அக்காணிகளில் பெரும்பகுதி தற்போது சிங்களவர்களாலும் முஸ்லீம்களாலும் அபகரிக்கப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் இருப்பவர்களாக இருந்தாலும் உள்நாட்டில் இருப்பவர்களாக இருந்தாலும் தங்களுடைய காணிகளை தாங்கள் தக்கவைத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த காணிகள் பறிபோவது காணிச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் பாதிப்பல்ல. ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கே பாதிப்பாக அமைந்து விடும்.

இது தவிர திருகோணமலையின் வடற்கு எல்லைபகுதியில் ஏற்கனவே ஜே.ஆர். ஜெயவர்தனா அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப் பட்ட பதவிக்குளத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட குடியேற்றம் பதவிசிறிபுர என்ற தனிப்பிரதேச செயலகமாக மாறியிருப்பது மட்டுமல்ல அதையும் தாண்டி புல்மோட்டை, திரியாய், குச்சவெளிவரை விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

ஜி.ரி.சற் என்ற ஜேர்மன் அரசசார்பற்ற நிறுவனம், ஜேர்மன் அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, ஐ.எவ்.எஸ்.பி என அழைக்கப்படும் திருகோணமலை உணவுத்திட்ட அமைப்பு கிழக்கு அபிவிருத்தி மற்றும் முஸ்லீம் விவகார அமைச்சு ஆகியன இணைந்து இத்திட்டமிட்ட குடியேற்றத்திற்கு உதவி வழங்கி வருகின்றன.



வெலிஓய திட்டத்தின் மூலம் சிங்கள குடியேற்றத்தை உருவாக்கி பதவிசிறிபுர என்ற நூறுவீதம் சிங்களவர்கள் வாழும் பிரதேச செயலகத்தை உருவாக்கியது போல புல்மோட்டை திரியாய், குச்சவெளி ஆகிய பிரதேசங்கள் துரிதகதியில் சிங்கள முஸ்லீம் மயமாகிவருகிறது. இதன் மூலம் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் நிலத்தொடர்பில் வாழ்கிறார்கள் என்பதை துண்டாட முடியும் என சிறிலங்கா அரசாங்கம் கருதுகிறது.

அது போல திருகோணமலையின் கிழக்கு எல்லையான பூமரத்தடிச்சேனை இலங்கைத்துறை வெருகல் ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு பதிலாக சிங்களவர்களையும் முஸ்லீம்களையும் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களும் உள்நாட்டில் இருக்கும் தமிழர்களும் தங்களது காணிகள் குடியிருப்புக்கள் சிங்கள முஸ்லீம்களின் கைகளுக்கு மாறிச்செல்லாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வெளிநாடுகளுக்கு வந்துவிட்டோம். ஊரில் காணிகளை வைத்திருந்து என்ன பிரயோசனம் என நினைத்துக்கொண்டிருக்கும் பலர் ஒன்றைப்புரிந்து கொள்ள வேண்டும் . பராமரிக்கப்படாமல் விடப்படும் காணிகள் பறிபோவது மட்டுமல்ல சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கே அது வழிவகுக்கும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் கிணற்றுக்குள் வீழ்ந்து கிடக்கிறோம் காப்பாற்றுங்கள்!

- நக்கீரன்

ஒரு பாவி மனிதன் பட்ட அவலத்தை ஒரு புலவர் பழம்பாடல் ஒன்றில் படம்பிடித்துக் காட்டுகிறார். விவேகசிந்தாமணி என்ற நூலில் இடம்பெற்ற அந்தப் பாடல் இதோ:

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய் நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளக்
கோவேந்த ருழுதண்ட கடமை கேட்கக்
குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்கப்,
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவிமகன் படுந்து யரம் பார்க்கொணாதே.
(விவேக சிந்தாமணி 7-7 )
பசு கன்றை ஈன
மழை விடாது பொழிய
வீடு இடிந்து விழ
மனைவி உடல் வேதனைப்பட
வேலைக்காரன் இறந்துவிட
ஈரம் காய்ந்துவிடுமென்று விதைக்க
விதை கொண்டு ஓட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள
உழுது வாழ்வதற்கான தீர்வையை அரசர் கேட்க
குருக்கள் வந்து குறுக்கே நின்று தட்சணை கேட்க
பாடகர் கவிகள் பாடி பரிசு கேட்க
பாவிமகன் படுகின்ற துயரம் பார்க்க இயலாதே.

இந்தப் பாடலைப் பாடிய புலவர் இன்றிருந்தால் வன்னியில் மக்கள் படும் பாட்டை ஒரு காவியமாகவே பாடியிருப்பார்.

உலக வரலாற்றில் மூன்றே நாட்களுக்குள் நாற்பதினாயிரம் மக்கள் ஈவிரக்கமில்லாமல் படுகொலை செய்யப்பட்டு அவர்கள் சிந்திய குருதியால் வன்னி மண் இன்னமும் சிவந்து கிடக்கிறது. அங்கு வீசும் காற்றில் சாவாடை மணக்கிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் ஜெனீவா உடன்பாட்டின்படி தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், நேப்பாம் குண்டுகள், உடலில் பட்டாலே பற்றி எரியும் பொஸ்பரஸ் குண்டுகள் ஆகியவற்றை சிங்கள இராணுவம் தாராளமாகப் பயன்படுத்தியது. உடலெங்கும் எரிந்த காயங்களுடன் கிடந்த சடலங்கள் இதை உறுதி செய்தன. தமிழர்களை இனப்படுகொலை செய்ததோடு சிங்கள இராணுவத்தினரின் கொலைவெறி நிற்கவில்லை. போரின் போது மக்கள் குடியிருப்புகள், மருத்துவமனைகள், பள்ளிகள், கோயில்கள் ஆகியவை குண்டு வீசி திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

போர் முடிந்து பதினேழு மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் இடப்பெயர்வுக்கு ஆளான எமது மக்கள் படும் பாட்டை எழுத்தில் வடிக்க முடியாது. ஒவ்வொரு நாளும் அவர்கள் சொல்லும் கண்ணீர்க் கதைகள் நமது நெஞ்சைப் பிளக்கின்றன. வன்னியில் முள்வேலி முகாம்களுக்குள் ஆடு மாடுகள் போல் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மீள்குடியேற்றம் என்ற பெயரில் வெளியில் விடப்பட்டாலும் அவர்களில் அநேகர் இன்னமும் பள்ளிக் கூடங்களிலும் திறந்த வெளியிலும் விடப்பட்டுள்ளார்கள். தலைக்கு 6 தகரம், 4 கம்பு, காசு அய்யாயிரமோ பத்தாயிரமோ கொடுத்து அந்தரத்தில் விடப்பட்டுள்ளார்கள்.

போதிய உணவில்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை, நோய்க்கு மருந்தில்லை, வேலை வாய்ப்பு இல்லை, கல்வி கற்க பள்ளிக்கூடங்கள் இல்லை என்ற “இல்லை“ புராணம் எமது மக்களிடம் இருந்து கேட்கிறது.

வன்னியில் உள்ள தாய் ஒருவர் காலையில் தேநீர் வைத்துக் குடிக்க தேயிலை, சீனி வாங்கக் கூட காசில்லை என்று அழுகிறார்.

மீள் குடியமர்த்தப்பட்டவர்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் குடியமர்த்தப்படவில்லை. அவர்களது காணிகள் சிங்கள இராணுவத்தினால் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டுள்ளது. வன்னியில் 10,000 ஏக்கர் நிலம் பாரிய இராணுவ தளங்கள், கடற்படைத் தளங்கள், இராணுவ குடும்பங்களுக்கு வீடுகள் உருவாக்க அரசு கையகப்படுத்தியுள்ளது. இவற்றை சீனாவே கட்டிக் கொடுக்கிறது. முல்லைத்தீவில் இராணுவ தலைமையகம் கட்டி முடித்தாகிவிட்டது. ஒரு தொகுதி வீடுகளும் கட்டப்பட்டு விட்டன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிந்தாலும் பாதுகாப்புச் செலவுக்கு சிறிலங்கா அரசு அடுத்த ஆண்டுக்கு (2011) ரூபா 21,500 கோடி (ரூபா 21.5 பில்லியன் அல்லது டொலர் 1.92 பில்லியன்) ஒதுக்கியுள்ளது. இதில் சரிபாதி இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்த தேசியச் செலவில் அயந்தில் ஒரு பங்காகும். இராணுவததினரின் எண்ணிக்கை 200,000 எட்டியுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் பற்றாக்குறை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 9.7 விழுக்காடாக உயர்ந்துள்ளது. காரணம் போர்க்காலத்தில் மேற்கொண்ட ஆயுதக் கொள்வனவுக்கு செலுத்த வேண்டிய கொடுக்குமதியில் ஒரு பகுதி இந்த ஆண்டு கொடுக்க வேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புக்குச் செலவு 6 விழுக்காடு உயர்ந்துள்ளது. 2010 ஆண்டின் பாதுகாப்புச் செலவு ருபா 20,400 கோடியாக இருந்தது. துண்டு விழும் தொகை மொத்த தேசியச் செலவில் அயந்தில் ஒரு பங்காகும். வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் பற்றாக்குறை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 9.7 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

பாதுகாப்புக்கு தாராளமாக செலவு செய்யும் சிறீ லங்கா அரசு மீள்குடியேற்றத்துக்கும் மீள்கட்டுமானத்துக்கும் வெறுமனே ரூபா 200 கோடியை ( பாதுகாப்புச் செலவில் ஒரு விழுக்காடு) மட்டும் ஒதுக்கியுள்ளது.

போரினால் அழிந்த வீடுகளை அரசு கட்டிக் கொடுக்காது என்றும் வீட்டுச் சொந்தக்காரர்களே கட்ட வேண்டும் என்று அமைச்சர் பசில் இராசபக்சே திருவாய் மலர்ந்துள்ளார்.

வன்னியில் மீள் குடியேற்றப்பட்டவர்களுக்கு போதிய உணவு, உடை, உறையுள், மருந்து, குடிதண்ணீர், கல்வி தொழில் வாய்ப்பு இல்லாது அல்லல்படுகிறார்கள்.

இந்த மக்களுக்கு உதவி செய்ய அரசு சார்பற்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மனிக் முகாமில் இருக்கும் மக்களைப் பார்ப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு அனுமதி மறுத்துள்ளது. உள்ளூர் ஊடகங்கள் சரி, பன்னாட்டு ஊடகங்களுக்கும் சரி இரண்டுக்கும் வன்னி செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் சிறிலங்கா அரசு வைக்கல் பட்டடை நாய்போல் நடந்து கொள்கிறது. மக்களுக்கு உதவ அரசிடம் பணம் இல்லை. உதவ முன்வரும் தொண்டு நிறுவனங்களுக்கும் தடை போடுகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் பருவ மழை தொடங்கி விட்டது. கட்டிய சிறு கொட்டில்கள் மழை வெள்ளத்தில் மிதக்கப் போகின்றன!

மொத்தத்தில் வன்னி மக்கள் "நாங்கள் கிணற்றுக்குள் வீழ்ந்து கிடக்கிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று புலம்பெயர் மக்களைப் பார்த்து கண்ணீர் மல்கக் கேட்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் எமது மக்களைக் காக்கும் பாரிய பொறுப்பு புலம்பெயர் தமிழர்களது தோள்களில் விழுந்துள்ளது.

பற்றை பற்றிப் போயுள்ள காணிகளைத் துப்பரவு செய்ய கத்தி இல்லை. நிலத்தை வெட்ட மண்வெட்டி இல்லை. கிணறு துப்பரவாக்க தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள் இல்லை. தொழில் இல்லை. உண்ணப் போதிய உணவில்லை. படிக்கப் பள்ளிகள் இல்லை. புத்தகங்கள் இல்லை.

போக்கு வரத்து இல்லை. மிதி வண்டிகள் இல்லை. எனவே இந்த மக்களுக்கு உதவப் புலம்பெயர் மக்கள் முன்வரவேண்டும். புலம்பெயர் மக்கள் நினைத்தால் இந்த மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

புலம்பெயர் மக்களில் ஒரு சிறு பகுதியினர் வன்னி மக்களுக்கு முடிந்தளவு உதவி செய்கிறார்கள். ஆனால் அது போதாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுவாழ்வு என்ற புதிய தொண்டு அமைப்பை உருவாக்கியுள்ளது. அதன் செயற்பாட்டுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய தலைமையகத்தின் மேற்தளம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறீலங்காவில் தடைசெய்யப்பட்டுள்ளதால் இந்த மறுவாழ்வு அமைப்பின் கிளைகளைப் புலம் பெயர்ந்த நாடுகளில் நிறுவி நிதி சேகரிக்கலாம்.

திருகோணமலை நலன்புரிச் சங்கம் வேறு எந்த ஊர்ச்சங்கங்களையும் விட தமிழ்த் தேசியத்துக்கு பெரும் பங்களிப்பு அளித்துவருகிறது. சாம்பல்தீவு மற்றும் மல்லிகைத் தீவில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு மாதந்தோறும் டொலர் 3,000 அனுப்பி உதவுகிறது.

எல்லா மதங்களும் அறம் செய்வதை வற்புறுத்துகிறது. பவுத்த காப்பியமான மணிமேகலை மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனச் சொல்கிறது.

அறம் எனப்படுவது யாதெனக் கேட்டபின்
மறவாது இதுகேள்! மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்.

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம்விலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
(பாத்திரம் பெற்ற காதை:92:96)

மக்கள், தேவர் இரு சாரார்க்கும் ஒத்த முடிவினை உடைய அறம் என்பது யாது என விளக்கும்போது பசிப்பிணி தீர்த்தலே சிறந்த அறம்.

இசுலாம் அறம் செய்வதைக் கட்டாயமாக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் வருவாயில் இரண்டரை விழுக்காடு ஏழை, எளியவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கதாவர்கள் தங்களை இசுலாமியர்கள் என்று சொல்ல முடியாது.

எனவே புலம்பெயர் மக்கள் செய்யும் ஆடம்பரச் செலவுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். திருமணங்கள், அரங்கேற்றம், பூப்பு நீராட்டு விழா போன்ற சமூக நிகழ்ச்சிகளுக்கு இருபதாயிரம் முப்பதாயிரம் எனச் செலவழிப்பதை தவிர்க்க வேண்டும். கோயில் திருவிழா, தேர், தீர்த்தம், அருச்சனை, அபிசேகம் எனப் பணத்தை விரயம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

மற்றவர்கள் பசியோடு இருக்கத் தான் மட்டும் உண்பவன் பாபத்தைச் சாப்பிடுகிறான் என விவிலியம் செப்புகிறது. பாரதியாரும் தனியொரு மனிதனுக்கு உணவில்லை என்றால் ஜெகத்தினை அழித்துவிடுவோம் என்று சூளுரைத்தார்.

படமாடும் கோயில் பரமர்க்கு ஈவதிலும் நடமாடும் கோயில் நம்பர்க்குக் கொடுத்தால் அது பரமர்க்குச் சென்று சேரும் என திருமந்திரத்தில் திருமூலர் அறிவுறுத்துகிறார்.

படமாடும் கோயில் பரமர்க்கொன்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க் கங்கா
நடமாடும் கோயில் நம்பர்க் கொன்று ஈயில்
படமாடும் கோயில் பரமர்க் கங்காகும்
(திருமந்திரம்)

குறைந்த பட்சம் புலம்பெயர் மக்கள் தங்கள் வருவாயில் 2 விழுக்காட்டை ஆவது அறப்பணிக்குச் செலவழிக்க முன்வரவேண்டும். வன்னியில் வாடும் மக்களைக் கிணற்றில் இருந்து தூக்கிவிடுகிற வரையாவது இந்த அறப்பாணியை செய்ய வேண்டும். பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட கொடுக்கும் கையே மேலானது என்பதை மறக்க வேண்டும்.


டென்மார்க்கில் 2000 தமிழ்க் குடும்பங்களே உள்ளன. ஆனால் அவர்கள் 500 குடும்பங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை நேரடியாக ஏற்றுள்ளார்கள்.


அது போலவே வேறு நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இவ்வாறே பல குடும்பங்களைப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

கனடாவில் குறைந்தது 50,000 தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன. இக்குடும்பங்கள் வன்னியில் அல்லல்படும் மக்களைப் பொறுப்பேற்க முன்வர வேண்டும். ஏற்கனவே பலர் அவ்வாறு பொறுப்பேற்றுள்ளார்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SELLING-BUYING-INVESTING

## வீடு, வியாபாரத் தளங்கள் வாங்க, விற்க அழையுங்கள்



**உங்கள் கனவு இல்லம் எங்கள் கரங்களில்..**

**உங்களுக்கான வீட்டின் Mortgage இனை அதி குறைந்த வட்டி வீதத்தில் பெற்றுக்கொள்ளவும்**



**Feel Free & Friendly To call us today**
**We'll show you your dream house**



**Thamil Suberamaniam**
Salesrepresentative
**Direct: 416-358-6200**

**Mugunthan Nadarajah**
Salesrepresentative
**Direct: 416-276-8025**

**HomeLife/Future Realty Inc. Brokerage***
7 Eastvale Dr, Suit 205, Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca

*Independently Owned and Operated

**புதிய முகவரி தேடும் உங்களுடன் முகவர்களாய் நாங்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துக் காப்புறுதி தேவைகளுக்கும் கல்வி சேமிப்புத்திட்டங்களுக்கும்

**Universal Life Insurance**

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

**RESP**

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

**Mortgage Insurance**

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

**Critical Illness Insurance**

25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடிறும்

**வயோதிபர்களுக்கான காப்புறுதி**

- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.

*Our guarantees are written in your policy*

Apex Creations - 416-297-0707

LILAND INSURANCE INC.

Assumption Life


INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

